1970 மார்ச் 4]

எந்தச் செயலாளர்களை அணுகிச் செல்கிறார்களோ அவர்களை கனம் உறுப்பினர் அவர்கள் அணுகிப் பேசுவதாக நான் அடிக்கடி கேள்விப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள் 156, 157, 195, 196 ஆகியவை பிறகு எடுத்துக்கொள்ளப்படும்.

அரிசன மாணவ விடுதிகளுக்கு பகுதிநேர சிற்றாசிரியர்கள்

*** 197 வினா.—திருமதி வி. ப. பழனியம்மாள் :** மாண்புமிகு வேளாண்மை, அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தாழ்த்தப்பட்டோர் நலத்துறையால் நடத்தப்பட்டு வரும் மாணவர் இல்லங்களில் அமர்த்தப்பட்டு இருக்கும் பகுதி நேரச் சிற்றாசிரியர்கள் எந்த அடிப்படையிலே நியமிக்கப்படுவார்கள் ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : ஹரிஜனங்களுக்காக அரசு விடுதிகளில் பகுதி நேரச் சிற்றாசிரியர்களை நியமிப்பது குறித்து கீழ்க்கண்ட நடைமுறை பின்பற்றப் படுகிறது:—

(1) பகுதி நேரச் சிற்றாசிரியர்கள், கீழ்க்கண்ட முறை வைப்பின் அடிப்படையில் தெரிந்தெடுக்கப்பட வேண்டும்.

(1)	(2) உயர்நிலைப் பள்ளி மாணவர் விடுதிகள்.	(3) கல்லூரி மாணவர் விடுதிகள்.
முதல் முறைவைப்பு	அரசு உயர்நிலைப் பள்ளிகளில் பணியாற்றும் பி. டி. ஆசிரியர்கள்.	அரசுக் கல்லூரிப் பேராசிரியர்கள்.
இரண்டாவது முறை வைப்பு.	வாரிய உயர்நிலைப் பள்ளிகளில் பணியாற்றும் பி. டி. ஆசிரியர்கள்.	அரசுக் கல்லூரி விரிவுரையாளர்கள், உதவி விரிவுரையாளர்கள்.
மூன்றாவது முறை வைப்பு.	மானியம் பெறும் உயர்நிலைப் பள்ளிகளில் பணியாற்றும் பி. டி. ஆசிரியர்கள்.	ஏனைய கல்லூரிகளில் பணிபுரியும் பேராசிரியர்கள்.
நான்காவது முறை வைப்பு.	ஏனையோர்.	ஏனைய கல்லூரிகளில் பணிபுரியும் விரிவுரையாளர்கள், உதவி விரிவுரையாளர்கள்.
ஐந்தாவது முறை வைப்பு.	..	ஏனையோர்.

(2) மாணவர் விடுதிகளைப் பொறுத்தவரையில், அனுபவமும், திறமையும் வாய்ந்த பி.டி., எல்.டி. ஆசிரியர்களை மாவட்ட நல்ல அதிகாரிகள் மாவட்டக் கல்வி அதிகாரிகளுடன் கலந்தாலோசித்துத் தெரிந்தெடுக்க வேண்டும். மாணவியர் விடுதிகளைப் பொறுத்தவரையில், அந்த ஆசிரியர்களை, பெண்கள் பள்ளி நேடுநருடன் (மகளிர்) (Inspectress) கலந்தாலோசித்துத் தெரிந்தெடுக்க வேண்டும். கல்லூரி மாணவர்களின் விடுதிகளைப்

பொறுத்தவரையில், அனுபவம், திறமை, விருப்பம் கொண்டவர்களை, சம்பந்தப்பட்ட கல்லூரிகளின் முதல்வர்களுடனும், கல்லூரிக் கல்வி இயக்குநருடனும் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கலந்தாலோசித்துத் தெரிந்தெடுக்க வேண்டும்.

திருமதி வி. ப. பழனியம்மாள் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த விடுதிகளில் மாலை நேரத்தில் கல்வி புகட்டுவதற்காக ஏற்கெனவே வேலையில் இருப்பவர்களைத்தான் அமர்த்துகிறார்கள். படித்த ஆசிரியர்கள் வேலையில்லாமல் இருக்கிறார்களே, அப்பேர்ப்பட்டவர்களை இந்தப் பணியில் அமர்த்த முடியுமா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : தலைவர் அவர்களே, இவர்கள் முழுநேர ஆசிரியர்கள் அல்ல. பகுதி நேர ஆசிரியர்கள்தான். பகுதிநேர ஆசிரியர்களுக்குத் தரப்படும் சம்பளம் மிகவும் குறைவு. ஆகவே, இந்தக் குறைந்த சம்பளத்தில் அவர்கள் வேலை செய்ய வருவது அரிதாக இருக்கும். அதற்காகத் தான் ஏற்கெனவே வேலையில் இருப்பவர்களுக்குப் பகுதி நேர ஊழியம் தரப்படுகிறது.

திரு. பி. துரைராஜ் : பேரவைத் தலைவர் அவர்களே, குறைந்தது எத்தனை மாணவர்கள் தங்கிப் படிக்கும் ஹாஸ்டல்களில் இம்மாதிரி ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதை அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : தலைவர் அவர்களே, இப்போது 84 உயர்நிலைப்பள்ளி மாணவர்கள் விடுதிகளிலும், 3 கல்லூரி மாணவர்கள் விடுதிகளிலும் பகுதிநேர ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : பேரவைத் தலைவர் அவர்களே, உயர்நிலைப்பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் வேலை செய்பவர்களுக்கு பகுதிநேர வேலை கொடுக்கப்பட்டிருக்கிறது. என்னுடைய கருத்து என்னவென்றால்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினர் அவர்கள் கேள்வி கேட்கலாமே தவிர, அவருடைய கருத்தைச் சொல்லக் கூடாது.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : பேரவைத் தலைவர் அவர்களே, வேலையில்லாமல் இருக்கிற, தகுதியுள்ள ஆசிரியர்களுக்கு இந்த வேலையாவது கொடுக்க அரசு வழிவகை செய்யுமா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : தலைவர் அவர்களே, நான் வேறொரு கேள்விக்குப் பதில் சொல்லும்போது சொன்னேன். இது பகுதிநேர ஊழியம், குறைந்த சம்பளம். உயர்நிலைப்பள்ளி மாணவர்கள் விடுதிகளில் பணியாற்றுபவர்களுக்கு 75 ரூபாய் என்றும், கல்லூரி மாணவர்கள் விடுதியில் பணியாற்றுபவர்களுக்கு 100 ரூபாய் என்றும் சம்பளம் கொடுக்கப்படுகிறது. வேலையில்லாமல் இருக்கும் ஆசிரியர்கள் இந்தக் குறைந்த சம்பளத்திற்கு வரமாட்டார்கள். ஆகவேதான் உயர்நிலைப்பள்ளிகள், கல்லூரிகளில் பணியாற்றுபவர்களுக்கு பகுதிநேர ஊழியம் தரப்படுகிறது.